**செ.வெ.எண்-06** **நாள்-05.04.2018**

# பத்திரிக்கைச் செய்தி

இரயில்வே தேர்வு வாரியத்தால் (RRB) நடத்தப்படவுள்ள ASSISTANT / LOCO PILOT ஆகிய 62907 பணிக்காலியிடங்களுக்கான போட்டித்தேர்விற்கு அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் இலவச பயிற்சி வகுப்புகள் வருகின்ற 10.04.2018 முதல் நடைபெற உள்ளது.

அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலம் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்பட்டதில் பலர் பயனடைந்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இரயில்வே தேர்வு வாரியத்தால் (RRB) நடத்தப்படவுள்ள ASSISTANT / LOCO PILOT பணிக்காலியிடங்களுக்கான போட்டித்தேர்விற்கு இவ்வலுவலகத்தின் மூலம் 10.04.2018 முதல் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்தில் மாணவர்கள் பயில்வதற்கு ஏற்றவகையில் அமைதியான சூழல், காற்றோட்டமான இடவசதி, அனைத்து வகையான புத்தகங்களும் மற்றும் இணையதள வசதியும் உள்ளது. எனவே, மேற்கண்ட தேர்விற்கு பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது பெயரை 09.04.2018க்குள் பதிவு செய்து கொள்ளவும். அவ்வாறு பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விண்ணப்பிக்கும்போது தங்களது விவரங்களையும், (RRB) தேர்வாணையத்தில் விண்ணப்பித்த விண்ணப்பத்தின் நகல், மின்னஞ்சல் முகவரி மற்றும் செல்போன் எண்ணை தெரிவிக்க வேண்டும். எனவே, மேற்படி 10.04.2018 அன்று தொடங்கப்படும் இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**